மாலை முரசு

பக்கங்கள் 12

# மீண்டும் ஆரம்பமானது குமுதினிப் படகு சேவை



நெடுந்தீவின் பிரதான போக்குவரத்து மார்க்கமான குமுதினிப் படகு இன்று 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 07 வியாழக்கிழமை 24.08.2023 அதிர்வு 24







# மன்னாரில் இருவர் சுட்டுப் படுகொலை!

## கடந்த வருட இரட்டைக் கொலைக்கு பழிவாங்கும் சம்பவமா?

மன்னார், அடம்பன் - முள்ளிக்கண்டல் பகுதியில் இன்று மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் அந்த இருவரும் சாவடைந் துள்ளனர்.

மன்னார், நொச்சிக்குளம் பகுதியைச் சேர்ந்த ஜேசுதாசன் அருந்தவராஜா (வயது 43) மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சன்னார் கிராமத்தைச் சேர்ந்த கணபதி காளிமுத்து (வயது 56) ஆகிய இரண்டு குடும்பஸ் தர்களே சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ள னர். 03

# 2 தனியார் வைத்தியசாலைகளுக்கு எதிராக வவுனியாவில் நடவடிக்கை

## சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் பாய்ச்சல்

வவுனியா பிராந்திய சுகா தார சேவைகள் திணைக்களத் தினரும், பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது முறைகேடான வகை யில் இயங்கிய தனியார் வைத் தியசாலைகள் இரண்டு 04

# மட்டக்களப்பு விபத்தில் இளம் ஆசிரியர் மரணம்




மட்டக்களப்பு, வாழைச்சேனை - புனாணை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளம் ஆசிரியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் 03

## வவுனியா இரட்டை கொலைச் சம்பவம்:

# சந்தேக நபர்கள், தேடப்படுவோரின் கடவுச்சீட்டுக்களை முடக்க உத்தரவு

வவுனியா, இரட்டைக் கொலைச் சந் தேக நபர்கள் மற்றும் தேடப்படும் நபர்க ளின் வங்கிக் கணக்குகளை பரிசோதிக்க குற்றப் புலனாய்வுத்திணைக்கள கொலை விசாரணைப் பிரிவுக்கு (சி.ஐ.டிக்கு) அனு மதி வழங்கியதுடன், அவர்கள் வெளி நாடு செல்லத் தடை விதித்து அவர்களது கடவுச் சீட்டுக்களை முடக்கவும் வவுனியா நீதிமன்றம் இன்று உத்தரவிட்டது. 04

## பிரதான சந்தேக நபரிடமிருந்து சிறையில் தொலைபேசி மீட்பு!

### தினமும் ஒரு பெண்ணுடன் 90 நிமிடங்கள் உரையாடல்

வவுனியாவை உலுக்கிய இரட்டைக் கொலை பிரதான சந்தேநபரிடம் இருந்து வவுனியா சிறைச்சாலையில் தொலை பேசி மீட்கப்பட்டுள்ளது. 04

# மின்சார கம்பியில் தேர் மோதுண்டதில் இரண்டு இளைஞர்கள் பரிதாப மரணம்

## மூவர் காயங்களுடன் வைத்தியசாலையில்



பசறை, நமுனுகுல கந்தேஹேன கதிர்காமம் தேர் ஊர்வலத்தின் போது மின்சாரம் தாக்கியதில் டிராக்டரில் பயணித்த இரு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். 03

# வானத்தில் ஏறி சந்திரனின் வாசலைப் பாரதம் தொடும்போது நாம் இங்கு தரைக்குக் கீழே தொல்பொருளைத் தேடுகிறோம்!



## இலங்கை அரசை விளாசித் தள்ளிய மனோ எம்.பி.

வானத்தில் ஏறி சந்திர மண்டல வாசலைப் பாரதம் தொடும் போது நாம் இங்கு தரைக்குக் கீழே தொல்பொருளைத் தேடுகின்றோம் என்று இலங்கை அரசை விளாசித் தள்ளியுள்ளார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி.

இது தொடர்பில் அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:- 04

# ‘சொர்க்கத்தின் சுமை’ மலையகக் கதைகளின் காட்சி






யாழ். பல்கலைக் கழக நுண்கலைத் துறை மற்றும் கலை வட்டத்தின் ஏற்பாட்டில் ‘சொர்க்கத்தின் சுமை’ என்னும் மலையகக் கதைகளின் காட்சி நேற்று (23) யாழ். பல்கலைக் கழக நுண்கலைத் துறைக் காட்சிக் கூடத்தில் ஆரம்பமாகியது. எதிர்வரும் 31 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# 370 படுகொலைச் சம்பவங்கள் இலங்கையில் இவ்வாண்டு பதிவு!

இந்த ஆண்டில் இதுவரையில் 370 படுகொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் இது வரையில் மாதாந்தம் 40 முதல் 50 வரையிலான படுகொலைகள் இடம் பெற்றுள்ளன என்று தெரிவித்துள்ளார்.

## டலஸ் அழகப்பெரும சுட்டிக்காட்டு

நாடு அராஜக நிலைக்கு தள்ளப் பட்டுள்ளது என்றும் நாகரீகமற்ற மனித சமூகம் வாழும் நாடாக இலங்கை மாறியுள்ளது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

போதைப்பொருள் வியாபாரம், காணிப் பிரச்சினை, தகாத உறவு போன்ற காரணிகளால் இடம்பெறும் மனித படுகொலைகளை தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை, போதைப்பொருள் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் விரிவான திட்டமொன்று முன்னெடுக்கப் படுகிறது என்று அரசு பதிலளித்துள் ளமை குறிப்பிடத்தக்கது.





# போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க நிபந்தனையற்ற ஆதரவை நல்குவேன்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ



போதைப் பொருள் அச்சுறுத்தலைத் தடுப்பது தேசிய பாதுகாப்புடன் நேரடியாக தொடர்புடையது. தேசிய பாதுகாப்பு ஆணையகம் கூட்டப்பட்டால், அதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க நிபந்தனையற்ற ஆதரவை நான் எப்போதும் வழங்குவேன்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் பாவனையை நாடளாவிய ரீதியில் விரைவில் இல்லாதொழிக்கும் நோக்கில், அதுதொடர்பான செயற்பாடுகளுக்கான நியமங்கள் மற்றும் முன்மொழிவுகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான தெரிவுக்குழு நேற்று (23) கூடியபோதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

30 ஆண்டு கால பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்த நாடாக உள்ள போதும், தற்போது போதைப்பொருள் பயங்கரவாத கடத்தலுக்கு பலியாகியுள்ளது இலங்கை.

பாடசாலைக் கல்வித் துறையிலும் இதன் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது. எனவே, போதைப்பொருள் கடத்தலை – பாவனையை இல்லாது ஒழிப்பது தேசிய நிகழ்ச்சி நிரலில் முதன்மையாக இருக்க வேண்டும்.

தேசிய பாதுகாப்பு ஆணையகம் எல்லா நேரங்களிலும் இது தொடர்பில் விவாதிக்க வேண்டும். இது தொடர்பில் சாதகமான வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டால் எதிர்க்கட்சி என்ற வகையில் நிபந்தனையற்று ஆதரவளிப்போம்.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பான துல்லியமான தரவு உள்ளதா என்பதில் சிக்கல் உள்ளது. சுற்றுலாத் துறையின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு 'பியர் பேமிட்' வழங்கப்பட்டாலும் 'சிகரெட்' மற்றும் 'அற்க ஹோல்' உரிமப் பத்திரம் வழங்குவது கூட குறைவாக இருக்க வேண்டும். அவ்வாறான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுமாயின் போதைப் பொருள் பாவனைசார் கலாசாரம் உருவாகும்.

சிறைச்சாலைகளின் சுற்றுமதில் சுவர்களில் இருந்து போதைப்பொருள் வீசப்படும் நிலை கூட உள்ளது. 30 ஆண்டுகால பயங்கரவாதம் அழிக்கப்பட்ட நாட்டில் இதுபோன்ற சம்பவங்கள் தடுக்கப்படாமல் இருப்பது ஆச்சரியமாக உள்ளது. இதற்கு கடுமையான சட்ட கட்டமைப்பு தேவை.

அரசியலைக் கடந்த பொருள் கட்டுப்பாட்டுடன் கூடிய வலுவான போதைப் பொருள் எதிர்ப்புப் படை நாட்டுக்குத் தேவை. அரசு எதுவாக இருந்தாலும் அதனை ஒரே நோக்கத்துடன் செயற்படுத்த வேண்டும்.

அரசமைப்பு ரீதியாக அது மாறாத சட்டமாக மாற்றப்பட வேண்டும். இப்பணியில் ஈடுபடுபவர்களுக்கு நல்ல ஊதியம் கிடைக்க வேண்டும். அத்தகைய அதிகாரிகளை பாராட்ட வேண்டும். இது போன்ற விடயங்களுக்கு உலகில் நல்ல மாதிரிகள் உள்ளன. அவற்றைப் பரிசீலனை செய்ய வேண்டும். இது தொடர்பாக விசேட வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

யுத்தத்தில் வெற்றி பெற சில வெற்றிகரமான வழிமுறைகளைப் பயன்படுத்தியது போல இதிலும் ஜனாதிபதி செயலணி போன்ற வெற்றிகரமான முறைமைசார் வேலைத்திட்டத்தை ஏற்படுத்தி அனைத்து தொடர்புடைய நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து வெற்றிகரமான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். போதைப் பொருளை அழிப்பதும் ஒரு யுத்தமென்பதால், அது பாடசாலையை ஆக்கிரமிக்க அனுமதிக்காமல் அழிக்கப்பட வேண்டும். இதற்காகச் சமூகத்தை மையப்படுத்தியதான வேலைத் திட்டத்தைக் கூட நடைமுறைப்படுத்த முடியும். – என்றார்

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மன்னாரில் இருவர்...

அந்த இருவரும் இன்று காலை மோட்டார் சைக்கிலில் வயலுக்குச் சென்றபோது துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இருவரும் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளனர்.

இந்தக் கொலைக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.

இதேவேளை, கடந்த வருடம் மன்னார், நொச்சிக்குளம் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நொச்சிக்குளத்தைச் சேர்ந்த ஒருவரும் இந்தத் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்துள்ளார்.

பழிக்குப் பழிவாங்கும் நோக்குடன் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக அடம்பன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### மின்சார கம்பியில்...

இந்த விபத்தில், பூடவத்தை நமுனுகுல பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய கணேசன் ரமேஷ், 27 வயதுடைய பன்னீர் செல்வகுமார் ஆகிய இரு இளைஞர்கள் உயிரிழந்தனர். அத்துடன் 30, 43, 57 வயதுடைய மூவர் காயமடைந்து பசறை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கந்தேஹேன கதிர்காமம் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நேற்று மாலை தெய்வானையுடன் புறப்பட்ட தேர் பெரஹர கந்தேஹேன, தேவதுர, பூட்டாவத்த ஆகிய கிராமங்க–ளின் ஊடாக இன்று காலை திரும்பும் வேளை பூட்டாவத்த பகுதியில் தேர் அதிக மின்னழுத்த மின்சாரத்தைக் கடத்தும் வடத்தில் மோதுண்டதால் இவ்விபத்து இடம்பெற்றது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இருவரின் சடலங்களும் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பதுளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு. சுஜித் வெதமுல்லவின் பணிப்புரையின் பேரில் நமுனுகுல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### மட்டக்களப்பு...

இன்று அதிகாலை 12.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அண்மையில் ஆங்கிலப் பாட ஆசிரியர் நியமனம் பெற்ற 25 வயதுடைய ஓட்டமாவடி – 3 ஆம் வட்டாரத்தில் வசித்து வந்த எஸ்.எச்.எம்.அஸாம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஓட்டமாவடி கல்விக் கோட்ட ரிதிதென்னை இக்ராஹ் வித்தியாலயத்தின் ஆங்கிலப் பாட ஆசிரியரான இவர் ரிதிதென்னையிலிருந்து ஓட்டமாவடி நோக்கி தனது நண்பருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது எதிரே வந்த பஸ்ஸில் மோதி சம்பவ இடத்தில் மரணமடைந்துள்ளார்.

இவ் விபத்தில் பலத்த காயமடைந்த மற்றையவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மரணமடைந்த இளம் ஆசிரியரின் உடல் வைத்திய பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பிரதான சந்தேக...**

பெண் ஒருவருடன் தினமும் 90 நிமிடங்கள் உள்ளடங்கலாக 35 தடவைகள் அவர் உரையாடியுள்ளார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினரால் நீதிமன்றிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வவுனியா, தோணிக்கல் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் புகுந்த நபர்கள் அவ் வீட்டில் இருந்த ஒருவர் மீது வாள் வீசி தாக்கியமையுடன், வீட்டிற்கு பெற்றோல் ஊற்றி தீ வைத்தனர். இச் சம்பவத்தில் இளம் குடும்பஸ்தர்களான கணவன், மனைவி ஆகிய இருவரும் மரணமடைந்திருந்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேக நபர் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டு குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் பிரதான சந்தேக நபர்கள் உட்பட 5 பேர் வவுனியா சிறைச்சாலையிலும், ஒருவர் அனுராதபுரம் சிறைச்சாலையிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் வவுனியா சிறைச்சாலையில் இருந்த பிரதான சந்தேக சந்தேக நபர் தொலைபேசி பாவித்துள்ளமை குற்றப் புலனாய்வு திணைக்களத்தினருக்குத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து இன்று (24.08) அதிகாலை சிறைச்சாலையில் மேற்கொண்ட திடீர் சோதனையில் பிரதான சந்தேக நபரிடம் இருந்து கைத்தொலைபேசி ஒன்று மீட்கப்பட்டுள்ளது. குறித்த தொலைபேசி ஊடாக 3292 வெளிச் செல்லும் அழைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையுடன், அதில் 3 அழைப்புக்கள் அந்த நபரின் மனைவிக்கும், பிறிதொரு பெண்ணுக்கு ஒன்றரை மணித்தியாலப்படி 35 தடவைகள் அழைப்பு எடுத்து கதைத்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள நீதிமன்றத்திடம் அனுமதி பெற்று குற்றப் புலனாய்வு திணைக்கள கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

---

**சந்தேக நபர்கள்...**

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த மாதம் 23 ஆம் திகதி அதிகாலை இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பில் 6 பேர் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்தேக நபர்கள் தொடர்பான விசாரணை வவுனியா நீதிமன்றில் இடம்பெற்று வந்த நிலையில் இன்றைய தினம் அடையாள அணிவகுப்புக்குத் திகயிடப்பட்டிருந்தது. எனினும் அடையாள அணிவகுப்புக்கு உரிய நபர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதானால் வழக்கு எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு திகதியிடப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரின் கொலை விசாரணைப் பிரிவினரால் முதலாம் மற்றும் இரண்டாம் சந்தேக நபர்களிடம் பெறப்பட்ட வாக்கு மூலம் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. பிரதான சந்தேக நபரான 6ஆம் சந்தேக நபரை மீள விசாரணை செய்ய மன்றில் அவர்கள் அனுமதி கோரியிருந்தனர். இதற்கு மன்று அனுமதி வழங்கியது.

அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட டிப்பர், பட்டா ரக வாகனம், 4 மோட்டர் சைக்கிள்கள், வாள்கள், கோடரிகள் உள்ளிட்ட சான்றுப் பொருள்கள் மன்றில் ஒப்படைக்கப்பட்டன.

மேலும், சந்தேக நபர்களினதும், தேடப்படும் நபர்களினதும் வங்கிக் கணக்குகளை பரிசோதனை செய்ய நீதிமன்றத்திடம் குற்றப் புலானாய்வு திணைக்களத்தினர் அனுமதி பெற்றனர். சம்பந்தப்பட்ட அனைவரும் வெளிநாடு செல்லத் தடை விதித்து அவர்களது கடவுச் சீட்டுக்களும் மன்றினால் முடக்கப்பட்டன.

பிரதான சந்தேக நபரான 6 ஆவது சந்தேக நபர் சிறைச்சாலையில் கைத்தொலைபேசி பாவித்துள்ளமையுடன், 3,292 அழைப்புக்களை மேற்கொண்டுள்ளார் எனவும் மன்றுக்குத் தெரியப்படுத்திய குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் அது தொடர்பில் விசாரணை செய்ய மன்றின் அனுமதியையும் பெற்றிருந்தனர்.

---

**மீண்டும் ஆரம்பமானது...**

வியாழக்கிழமை முதல் மீண்டும் பயணிகள் சேவையில் ஈடுபட ஆரம்பித்துள்ளது.

குமுதினிப்படகு பழுதடைந்தநிலையில் திருத்த வேலைகளின் பின்னர் குறிகாட்டுவானில் தரித்துவிடப்பட்டிருந்தது. நேற்று மாலை குமுதினிப் படகு குறிகாட்டுவானில் இருந்து பயணிகளை ஏற்றியவாறு நெடுந்தீவு சென்று தரித்ததுடன் இன்று காலை 7 மணிக்கு நெடுந்தீவில் இருந்து குமுதினிப் படகு குறிகாட்டுவான் நோக்கிப் புறப்பட்டு அங்கிருந்து மீண்டும் நெடுந்தீவுக்குப் பயணித்தது.

யாழ்.குறிகட்டுவான் மற்றும் நெடுந்தீவு பயணிகளுக்கான கடல்வழிப் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட குமுதினி படகு அடிக்கடி செயலிழந்த நிலையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் குமுதினி படகின் திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

குமுதினி படகு 1968 ஆம் ஆண்டு முதல் யாழ். - நெடுந்தீவிற்கான போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

---

**வானத்தில் ஏறி...**

"சந்திரனில் தடம் பதித்த நான்காம் நாடாகவும், நிலவின் தென்முனையில் விண்கலத்தை இறக்கிய முதலாவது நாடாகவும் பாரதம் சரித்திரம் படைத்துள்ளது. இந்திய மக்களுக்கும், அரசுக்கும், குறிப்பாக இந்திய இஸ்ரோ நிறுவனத்தின் "மூன் - ப்ராஜெக்ட்" வேலைத்திட்டப் பணிப்பாளர் வீரமுத்துவேல் தலைமையிலான விஞ்ஞான தொழிட்நுட்ப அணிக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

இந்தச் சாதனையை எண்ணி, தென்னாசிய நாட்டவராகவும், இந்திய வம்சாவளி தமிழராகவும் பெருமையடைகின்றேன். ஆனால், வானத்தில் ஏறி சந்திர மண்டல வாசலைப் பாரதம் தொடும் போது, நாம் இங்கு தரைக்குக் கீழே தொல்பொருளைத் தேடுகின்றோம் என்ற உண்மையை உணர்ந்து வருந்துகின்றேன்.

பாரதம் தந்த 13 பிளஸ் மாகாண சபையும் இன்று குருந்தூர் மலையில் ஏறி விழுந்து நிற்கின்றது. அது காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் என்று இழுபறி படுகின்றது. சரித்திரத்தில் இருந்து பாடம் படிப்பதற்குப் பதிலாக, எல்லாப் பிரச்சினைகளுக்கும் சரித்திரத்துக்குள் நுழைந்து பதில் தேடும் தோற்றுப்போன நாட்டவராக நாம் இன்று இருக்கின்றோம்.

தொல்பொருள் அகழாய்வு பிரதேசம், மதங்களுக்கும், மத நிகழ்வுகளுக்கும் இடம் தராத பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக இருக்க வேண்டும். அது தொடர்பான எல்லா வரலாறு உண்மைகளையும் ஆவணப்படுத்தி ஆர்வலர்களுக்கு எடுத்துக் கூறும் அரச நிறுவனமாக இருக்க வேண்டும் என்ற முற்போக்கான சிந்தனையறிவு எமக்கு இல்லை. ஆகவே, ஒருநாள், மாலைதீவும் இப்படி "மூன் - ரொக்கட்" அனுப்பும் வரை நாம் இப்படி தொல்பொருளாராய்ச்சியில் தேடி மோதிக் கொண்டே இருப்போம்." - என்றுள்ளது.

---

**2 தனியார்...**

கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனவும் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதாரப் பிரிவினர் இன்று தெரிவித்தனர்.

வவுனியா வைத்தியசாலையில் அண்மையில் இடம் பெற்ற வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளரின் ஊடக சந்திப்பின் போது வவுனியாவில் முறைகேடான முறையில் - அதாவது உரிய தகுதி பெறாத வைத்தியர்கள் சிலர் - தனியார் வைத்தியசாலைகளையும், மருந்தகங்களையும் நடத்துகின்றனர் என ஊடகவியலாளர்கள் குற்றம் சாட்டி அதனைச் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதனையடுத்து, வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தியின் பணிப்புக்கு அமைய வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து வவுனியா, நெளுக்குளம் பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிகையின் போது ஆயுள்வேத வைத்தியர் ஒருவர் தனியார் வைத்தியசாலையின் பேரில் ஆங்கில மருந்துகளை விநியோகம் செய்வது கண்டு பிடிக்கப்பட்டதுடன், அங்கிருந்த பெருந்தொகையான மருந்துகளும் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன், சிதம்பரபுரம் பகுதியில் உள்ள ஒருவர் ஆயுள்வேத வைத்தியர் என்ற பெயரில் வைத்தியசாலை ஒன்றை நடத்தி வந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்த வைத்தியசாலையில் இருந்த ஆயுள்வேத மற்றும் ஆங்கில மருந்துகள் மீட்கப்பட்டுள்ளன. அந்த நபர் ஆயுள்வேத வைத்தியர் கூட இல்லை என்பதும் தெரியவந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தனியார் வைத்தியசாலைகளை நடத்திய உரிமையாளர்கள் இருவரையும் விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இரு நிலையங்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

# கொள்கலன் பாரவூர்தி காலியில் எரிந்து நாசம்

கொழும்பிலிருந்து காலி நோக்கிப் பொருள்களை ஏற்றிச் சென்ற கொள்கலன் பாரவூர்தி ஒன்று இன்று வியாழக்கிழமை காலை காலி கலேகன பகுதியில் தீப்பிடித்து எரிந்துள்ளது.

இதனால் கொள்கலனிலிருந்த பொருள்கள் அனைத்தும் தீயில் எரிந்து நாசமாகின.

இந்த கொள்கலன் வாகனம் காலி நகரில் உள்ள பல வர்த்தக நிலையங்களுக்கு பொருள்களைக் கொண்டு சென்று கொண்டிருந்தபோதே தீப் பற்றி எரிந்துள்ளது.

தீ பரவியமைக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. காலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கடலில் புதிய சிக்கல்

இலங்கை - இந்தியக் கடல் எல்லைப் பகுதியில் இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையிலான பிணக்கு நீண்ட சரித்திரத்தைக் கொண்டது. தமிழகத் தமிழர்களின் தொப்புள் கொடி உறவுகள் என்று கருதப்படும் இலங்கையின் வடக்கு கிழக்குத் தாயக மக்களை, அந்தத் தமிழக உறவுகளிடமிருந்து இந்தச் சிறிய கடல் பரப்புத்தான் பிரித்து நிற்கின்றது. அந்தக் கடற்பரப்பில், தொப்புள் கொடி உறவுகளின் மீனவர்கள் இடையேயான பிணக்கு தீர்க்கப்படாமல் நீண்டு செல்கின்றது.

அதனிடைய ஆபத்தான - விபரீதமான - விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய புதிய பூதம் ஒன்று உள்நுழைந்து இருக்கின்றது. அது குறித்து இலங்கைத் தரப்பில் அலட்டிக்கொள்ளப்படாவிட்டாலும் இந்தியாவில் - குறிப்பாக தமிழகத்தில் - அது பேரதிர்வுகளை ஏற்படுத்தி நிற்பது கண்கூடு.

அது - இப்பிணக்குகளுக்கு மத்தியில் கடற்கொள்ளையர்களின் அட்டூழியம் அல்லது அட்டகாசம்.

நாகை மாவட்டம் வேதாரண்யத்துக்கு அருகே ஆறுகாட்டுத்துறையில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது இலங்கைக் கடற்கொள்ளையர்கள் என்று கூறப்படுவோர் இரும்புக் கம்பிகள், வாள்கள், கத்திகள், உருட்டுக்கட்டைகள் என்பவற்றின் மூலம் தாக்குதல் நடத்தி, இந்தியப் பணத்தில் சுமார் 10 லட்சம் ரூபாவுக்கு மேல் மதிப்புள்ள மீன்பிடிக் கருவிகள், தொழில்நுட்ப உபகரணங்கள், பெறுமதியான பொருள்கள் மற்றும் மீன்களைக் கொள்ளையடித்துச் சென்றிருக்கின்றனர். 11 மீனவர்கள் படுகாயம் அடைந்திருக்கின்றனர். அதில் ஒருவருக்கு மட்டும் தலையில் 21 தையல்கள் போடப்பட்டுள்ளன.

ஓரிரு தினங்களுக்கு முன்னர் ஆறுகாட்டுத் துறையில் இருந்து தென்கிழக்கே 22 கடல் மைல் தொலைவில் நடந்த இந்தக் கொடூரத்துக்கு இரண்டு தமிழக மீனவர் படகுகள் இலக்காகியிருக்கின்றன. இதே போன்ற

ஒரு கொள்ளை சம்பவம் பத்து நாள்களுக்கு முன்னரும் நடந்திருக்கின்றது.

இந்தச் சம்பவத்தை ஒட்டி ஐந்து படகுகளில் வந்தவர்கள் என்று கூறப்படும் அடையாளம் தெரியாத இலங்கைக் கடற்கொள்ளையர்கள் 46 பேர் மீது நாகையில் கடலோரக் காவல் படையினர் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

உலகத்தையே ஆட்டிப்படைத்த சோமாலியக் கடற்கொள்ளையர்களை அடக்கி வெற்றி கண்டதில் இந்தியக் கடற்படை மற்றும் கடலோரக் காவல் படைக்குத் தனிச் சிறப்பிடம் உண்டு. அதுமட்டுமல்ல. இந்திய நாடாளுமன்றத்தில் 2019 இல் கொண்டுவரப்பட்ட கடற்கொள்ளையர் எதிர்ப்புச் சட்டம் கடந்த ஜனவரி முதல் இந்தியாவில் நடைமுறைக்கு வந்துள்ளது.

இலங்கை - இந்திய கடல் எல்லைப் பிரதேசத்தில் நடக்கும் பிணக்கை கடற்கொள்ளை எதிர்ப்பு நடவடிக்கை என்ற கோதாவிலும் இந்தியக் கடற்பாதுகாப்பு தரப்புகள் கையாள முற்பட்டால் அது பல விபரீத விளைவுகளுக்கு வழி ஏற்படுத்தி விடும்.

விஞ்ஞானத் தொழில்நுட்பம் உச்சத்தை தொட்டிருக்கும் காலத்தில் அநாவசிய சீண்டல்களை, குசும்புகளை அநாமேதயமாக மேற்கொண்டு விட்டுத் தப்ப முடியாது. அத்தகைய சீண்டல்கள் முடிவு கட்ட முடியாத விபரீதங்களையும் ஏற்படுத்தி விடும்.

கடற்கொள்ளையர்கள் என்று கருதப்படுவோர் புறப்பட்ட இடத்திலிருந்து, தாங்கள் தங்களின் கைவரிசையைக் காட்டிய பின்னர் மீண்டும் சென்றடைந்த இடம் வரை, துல்லியமாக நோட்டமிடக்கூடிய அதியுயர் தொழில்நுட்ப விஞ்ஞான வளர்ச்சி இப்போது உள்ளது. இந்தச் சமயத்தில் இத்தகைய விபரீத விளையாட்டுக்கள் பெரும் வினையாகிவிடும்.

நடந்து முடிந்த பின் வேதனைப் பட்டு பிரயோசனமில்லை. நேரத்துடனேயே விவேகமாகச் சிந்தித்து நடப்பது எல்லா தரப்புகளுக்கும் நல்லது.

## அம்பாறை மாவட்ட செயலகத்தில் வெளிக்கள உத்தியோகத்தர் செயலமர்வு



(அஸ்ஹர்இப்றாஹிம்)

அம்பாறை மாவட்ட செயலகத்தில் வெளிக்கள உத்தியோகத்தர் செயலமர்வு நடைபெற்றது.

இதில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களின் ஊடாக பொது மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய தேர்தல் சம்பந்தமான விடயங்கள் ஆராயப்பட்டது.

வாக்குரிமையை பிறருக்கு விட்டுக் கொடுக்க முடியாத உரிமையாகும் என்ற தலைப்பில் அம்பாறை மாவட்ட செயலகத்தின் டீ.எம்.ஆரியரெட்ண கேட்போர் கூடத்தில் உதவி தேர்தல்கள் ஆணையாளர் கசுன் சிறிநாந் அத்தநாயக தலைமையில் செயலமர்வு இடம்பெற்றது.

பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் தேர்தல் துறையுடன் சம்பந்தப்பட்ட உத்தியோஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## மலசல கூடங்கள் கையளிப்பு





( அஸ்ஹர்இப்றாஹிம்)

றிஸ்லி முஸ்தபா கல்வி உதவி சமூக சேவை அமைப்பின் நிதியுதவியில் தெஹியத்தக்கண்டி இந்தசார பிள்ளை பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி இல்லத்துக்குக் கற்றல் உபகரணங்கள் மற்றும் மலசல கூடங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிள்ளை பராமரிப்பு நிலைய நிர்வாகிகள் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் இல்லத்துக்குத் தேவையான அடிப்படைத் தேவைகள் அண்மையில் நிறைவேற்றப்பட்டது.

றிஸ்லி முஸ்தபா தலைமையில் தெஹியத்தக் கண்டிக்கு சென்ற அமைப்பின் உறுப்பினர்கள் பிள்ளைகளுக்கு தேவையான பாடசாலை பைகள் மற்றும் கற்றல் உபகரணங்களை வழங்கினர்.

அத்துடன் புதிதாக அமைக்கப்பட்ட மலசல கூடங்களும் பாவனைக்குத் திறந்துவிடப்பட்டன.

மேற்படி இல்லத்தில் 28 ஆதரவற்ற பிள்ளைகள் பாராமரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 80 பயன்தரு பழமரங்கள் களுவாஞ்சிகுடியில் நடுகை









( வி.ரி. சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தால் நடைமுறைப் படுத்தப்படும் மரநடுகை நிகழ்வுக ளில் ஒரு நிகழ்வாக பழமரத் தோட்டம் அமைக்கும் நிகழ்வானது நேற்று முன்தினம் (22) பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் குருக்கள்மடம் அசீசி சிறுவர் இல்லத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளரின் வழிகாட்டலில் பிரதேச செயலக உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைவாக பிரதேச செயலக பிரிவில் பல மரநடுகை திட்டங்கள் உத்தியோ கத்தர்களால் இந்தத் திட்டம் மேற்கொள் ளப்பட்டு வருகின்றது.

இதன்போது 80 பயன்தரு பழ மரக் கன்றுகள் (மா, தோடை, மாதுளை, கொய்யா) நடுகை செய்யப்பட்டன.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி. சத்யகௌரி தரணி தரன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் த. நிர்மலராஜ், அருட்சகோதரர் ஜெகன், அருட்தந்தை அம்றோஸ், நன்னிலம் நிறுவனத்தின் உறுப்பினர் சிந்துஷா, கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் (திட்டமிடல்) மற்றும் சிறுவர் இல்ல மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வினை பிரதேச செயலக உத்தியோகத்தர்களான ப. ராஜதிலகன் (கலாசார அபிவிருத்தி உத்தியோகத் தர்) மற்றும் வ. பிரசாந்த் (வெளிக்கள இணைப்பாளர்- விதாதர்) ஆகியோர் இணைந்து செயற்படுத்தினர்.

# சாய்ந்தமருது தோணா வாவியில் நீர்க்களை வளர்ந்து காணப்படுவதால் சுகாதார சீர்கேடு

( அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவில் இருந்து ஆரம்பமாகி மாளிகைக்காடு, சாய்ந்தமருது ஊடாக குறுக்கறுத்து சாய்ந்தமருது முகத் துவாரத்தில் கலக்கும் தோணா வாவி யில் நீர்க்களைகள் வளர்ந்து காணப் படுகின்றன.

இதனால் சுகாதார சீர்கேடுகள் நிலவுகிறது என்று பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தோணா வாவியை ஆற்று வாழை கள் ஆக்கிரமித்து வளர்ந்துள்ளதால் டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. தொற்று நோய்களும் பரவலாம் என்ற அச்சமும் மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

இதனால் பகலிலும் இரவிலும் துர் நாற்றம் வீசுவதுடன் விஷ ஜந்துக்களின் நடமாட்டமும் அதிகரித்துள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்துமாறு பிரதேச வாசிகள் கேட்டுள்ளனர்.



# நீதிமன்றத்தில் வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி மூலம் நடந்த கொலை!

மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தின் வழக்குப் பொருள்கள் அறையில் வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியொன்றை திக்வெல்ல முதுகமுவ பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் கண்டுபி டித்துள்ளனர்.

கடந்த 15 ஆம் திகதி திக்வெல்ல, போடரகந்த பிரதேசத்தில் உயிரிழந்த மாத்தறை, உயன்வந்த தெற்கு பகுதி யைச் சேர்ந்த 45 வயதான முதுகமுவ ஆராச்சி சஞ்சீவ என்பவரைக் கொலை செய்ய பயன்படுத்தப்பட்ட ரி- 56 ரகத் துப்பாக்கி இது என தற்போது அடை யாளம் காணப்பட்டுள்ளது.

மாத்தறை நீதிவான் நீதிமன்ற பி.ஆர். 152/9 இலக்கம் கொண்ட ரி- 56 துப்பாக்கி மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தின் வழக்குப் பொருள்கள் அறையில் ஒப்படைக்கப்பட்டதாக தகவல் கிடைத்துள்ளது. வழக்குப் பொருள்களை வெளியே எடுத்துச் சென்றமை தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன என நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# சின்னமுத்து நோய்ப் பரவலை தடுப்பது குறித்துக் கலந்துரையாடல்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம். றிபாஸ் ஆலோசனைக்கு அமைவாகக் கல்முனை பிராந்திய தொற்று நோய் தடுப்பியளாளர் டாக்டர் எம்.ஏ.சி.எம். பஷாலால் சின்னமுத்து மற்றும் ஜேர்மன் சின்னமுத்து உள்ளிட்ட தொற்று நோய்கள் தொடர்பிலும் அதற்கான தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதன் அவசியம் பற்றியும் பணிமனையின் கேட்போர் கூடத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

தற்போது கொழும்பை அண்டிய பகுதிகளில் தடுப்பூசிகளை பெறாத சில குழுக்களால் இவ்வாறான நோய்ப் பரவல் ஏற்படுவதாக அறிய கிடைக்கப்பெற்றதை அடுத்து கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் தொற்றுநோய் தடுப்பு பிரிவு குறித்த கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தது.

இந்தக் கலந்துரையாடலில் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துவதன் அவசியம் பற்றியும் குழந்தைகளுக்கு தொற்று நோய்கள் ஏற்படுவதால் ஏற்படும் பாரதூரமான விளைவுகள் பற்றியும் அறிவுறுத்தப்பட்டது. தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு மத நிறுவனங்களின் பங்களிப்பை பெறுவதற்கான பொறிமுறைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது .

எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளுக்கு மத நிறுவனங்களின் பங்களிப்பை பெற்று மத நிறுவனங்களின் ஊடாக தொற்று நோய்கள் மற்றும் தடுப்பூசிகள் தொடர்பிலான விழிப்புணர்வை வழங்குவது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

சடுதியாக இவ்வாறான நோய்கள் ஏற்படுவதைக் கட்டுப்படுத்தவும் அதனால் ஏற்படும் மரணங்கள் மற்றும் பாரதூரமான இழப்புக்களைத் தவிர்க்கும் நோக்குடனும் இவ்விசேட கலந்துரையாடலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்த நிகழ்வின் ஒரு அங்கமாக கல்முனை பிராந்திய உள நலப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே. நௌபல், தற்போது தற்கொலை சம்பவங்கள் அதிகரித்து வருவது தொடர்பில் விழிப்புணர்வு கருத்துரை வழங்கினார்.

இந்த நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம். பி. அப்துல் வாஜித், பணிமனையின் பிரிவுத் தலைவர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், மத குருமார் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# ஐக்கிய தேசிய கட்சியின் பொதுக்கூட்டம்

# சாவகச்சேரி தலைமை அலுவலகத்தில்



(த.சுபேசன்)

ஐக்கிய தேசிய கட்சியின் பொதுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஐக்கிய தேசிய கட்சியின் சாவகச்சேரி தலைமை அலுவலகத்தில் இடம் பெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சாவகச்சேரி நகரசபை முன்னாள் உறுப்பினர் கு.சர்வானந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் ரங்க பண்டார கலந்து கொண்டார்.

முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், சர்வ மத குருமார்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



இதன்போது கட்சியில் புதிதாக இணைந்த உறுப்பினர்களுக்கு கட்சியின் பொதுச் செயலாளரால் கட்சியின் உறுப்புரிமை வழங்கி வைக்கப்பட்டது.

அத்துடன் ஏற்கனவே நியமனக் கடிதம் கிடைத்தும் நியமனம் இடைநிறுத்தப்பட்டுள்ள சுகாதார தொண்டர்களுடனான சந்திப்பு, தகுதி இருந்தும் சமுர்த்தி கொடுப்பனவு நிராகரிக்கப்பட்டவர்களுடனான சந்திப்புகள் ஆகியனவும் இடம்பெற்றன.

# அம்பாறை, மகாஓயா பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம்

## மின்வேலி அமைத்துத் தருமாறும் கோரிக்கை



(அஸ்ஹர் இப்றாஹிம்)

மகாஓயா பிரதேச செயலகப் பிரிவுக் குட்பட்ட கிராமங்களுக்குள் தினசரி படையெடுக்கும் காட்டு யானைகளின் தொல்லையால் பயிர்களுக்கும் குடியிருப்புகளுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுவருகிறது என்று பிரதேசவாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அம்பாறை-மகாஓயாபிரதானவீதிக்கு அருகாமையில் மிகவும் அதிகமான பணச்செலவில் பயிரிடப்பட்டிருந்த சுரைக் காய், கத்தரி, மிளகாய், தக்காளி போன்ற தோட்டத்தை இரவு வேளையில் கூட்டமாக வந்த காட்டு யானைகள் அழித்து நாசம் பண்ணியுள்ளன.

பயிரிட்டு அறுவடைக்கு தயாராகவிருந்த பயிர்களே இவ்வாறு அழிக்கப் பட்டுள்ளன

இதேவேளை மகா ஓயா - பதியத்தலாவ பிரதான வீதிக்கு அருகாமையில் பயிரிடப்பட்டிருந்த சோளத்தோட்டத்துக்குள் உட்புகுந்த காட்டு யானைகள் தோட்டத்தை முழுமையாக அழித்துள் ளன. அருகிலிருந்த குடியிருப்புகளுக்கும் பலத்த சேதத்தை விளைவித் துள்ளன.

இரவு வேளையில் இப்பிரதேச மக்கள் தமது குடியிருப்புகளில் வசிக்க முடியாத நிலையிலுள்ளது என்று தெரிவிக்கின் றனர். தமது பயிர்கள் இவ்வாறான தொடர்ச்சியான அழிவுக்கு உட்படுவ தால் பாரிய நஷ்டத்தை எதிர்நோக்கி வருகின்றனர் என்று பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

காட்டு யானைகளின் தொல்லையில் இருந்து தமது பயிர்களையும், குடியிருப்புகளையும், உயிர்களையும் பாதுகாப்பதற்காக மின்வேலிகளை அமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இப்பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

# 5 மாதங்களுக்கு முன் கொல்லப்பட்ட பெண்ணின் கணவர் கைதானார்!

அலவத்துகொட, உல்லேகடை பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய திருமணமான பெண், ஐந்து மாதங் களுக்கு முன்னர் கொலை செய்யப் பட்டமை தொடர்பில் கணவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மார்ச் 10 ஆம் திகதி, பெண் ஒருவர் கொடூரமான முறையில் படு கொலை செய்யப்பட்டு, நெல் வயல் ஒன் றில்புதைத்தசம்பவம்தொடர்பில்பல்வேறு கோணங்களில் விசாரணைகளை அலவத்துகொட பொலிஸ் குற்றப் புல னாய்வுப் பிரிவினர் மேற்கொண்டிருந் தனர்.

இந்த நிலையில் அந்தப் பெண்ணின் கணவரை நேற்றுக் கைது செய்துள்ள னர்.

தனுகா மதுவந்தி என்ற 26 வய துடைய பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலை தொடர்பில் கிடைத்த தடயங்களுக்கமைய, ஒருவர் சந்தே கத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இருந்த போதிலும், சம்பவம் தொடர் பில் பொலிஸாருக்கு ஏற்பட்ட சந்தேகத் திற்கமைய, மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் உயிரிழந்த பெண்ணின் கணவரை கைது செய் துள்ளனர்.

கொலை செய்யப்பட்ட பெண்ணின் சடலம் வீட்டில் இருந்து 100 மீற்றர் தொலைவில் கண்டெடுக்கப்பட்டது. அதற்கமைய, கணவர் தொடர்பில் பல சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள உயிரி ழந்த பெண்ணின் கணவரான 27 வய துடைய சந்தேக நபர் இன்று (23) கண்டி நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத் தப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அறிவித்தல் பலகை அன்பளிப்பு





(பௌசுல் றிபஸ்)

நிந்தவூர் அல் அஷ்றக் தேசிய பாட சாலையின் பெண்கள் பிரிவால் முன் வைக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து "றிஸ்லி முஸ்தபா எடியுகேசன் எயிட்" அமைப்பால் புதிய அறிவித்தல் பலகை அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபர் எம்.அப்துல் கபூர் தலைமையில் நேற்று (22) நடைபெற்ற இந்த நிகழ்வில் அமைப்பின் ஸ்தாபகர் றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாக கலந்து கொண்டு இதனை வழங்கி வைத்தார்.



# நிலவில் உலா வரத் தொடங்கியுள்ள சந்திரயான்-3 இன் ரோவர் பிரக்ஞன்!

சந்திரயான்-3 விண்கலத்தின் லேண்டரில் இருந்து சாய்தள பாதையின் வழியாக வெளிவந்த ரோவர் பிரக்ஞன் தற்போது நிலவில் உலா வரத் தொடங்கியுள்ளது என இஸ்ரோ ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நிலவின் தென் துருவத்தில் அரிய கனிமங்கள், ஐஸ் தொடர்பில் ரோவர் பிரக்யான் ஆய்வுகளை ஆரம்பித்துள்ளது என தெரிவிக்கப் படுகின்றது.

இந்தியாவின் சந்திரயான்-3 விண்கலம் நேற்று நிலாவில் வெற்றிகரமாக தரையிறங்கியது.

சந்திரயான்-3 தனது நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவு செய்தமையின் ஊடாக, அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனாவிற்கு பின்னர், நிலவு தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு சாதனைகளைப் படைத்த உலகின் நான்காவது நாடாக இந்தியா பதிவாகியுள்ளது.

நிலவின் தென் துருவத்தைத் தொட்ட முதலாவது நாடாக இந்தியா பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுபான்மையினர் உரிமையை காக்க தி.மு.க. தொடர்ந்து செயலாற்றும்!

## - முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி




சிறுபான்மையினர் உரிமைகளைக் காக்க தி.மு.க. தொடர்ந்து செயலாற்றும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதியளித்துள்ளார்.

சென்னை கோயம்பேடு, புனித தாமஸ் கல்லூரி அரங்கில், மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நூற்றாண்டு விழா மற்றும் அனைத்து கல்லூரி மாணவ மாணவியருக்கான பேச்சுப்போட்டி பரிசளிப்பு விழா முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றுகையில், எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளுங்கட்சியாக இருந் தாலும் அப்போதைக்கப்போது எழுந்து சில கேள்வியை கேட்கவேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

தி.மு.க. அரசு எப்போது ஆட்சிப் பொறுப்பேற்கிறதோ, அப்போ தெல்லாம் சிறுபான்மையினர் நலனுக்காக போராடக் கூடிய, வாதாடக் கூடிய, சாதனைகளை தீட்டக்கூடிய பல்வேறு பணிகளை நிறைவேற்றி தந்திருக்கிறது.

கிராமப்புற சிறுபான்மையின மாணவியர் இடைநிற்றல் இன்றி தொடர்ந்து கல்வி பயில, 3 முதல்6 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியருக்கு 3.60 கோடி ரூபாவில் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான ஹஜ் புனிதப் பயணம் மேற்கொண்ட 3,987 பயனாளிகளுக்கு 10 கோடி ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இப்படி சிறுபான்மையினர் நலன்காக்கும் ஏராளமான திட்டங்களை அரசின் மூலமாக நாம் தொடர்ந்து செய்து வருகிறோம். சிறுபான்மையினர் உரிமைகளைக் காக்க, மக்கள்மன்றத்திலும் திமுக தொடர்ந்து செயலாற்றும் என்று உறுதியளிக்கிறேன்.

நம் தமிழகத்துக்கு என்று தனிகுணம் உண்டு. சமத்துவம், சகோதரத்துவம், சமூக நீதி, சுயமரியாதை, பகுத்தறிவு என்று பண்பட்ட பண்பாட்டைக் கொண்ட நம் தமிழ் மண்ணின் உணர்வை மாணவர்கள் அனைவரும் பெற வேண்டும். ஒற்றுமையோடு வேற்றுமை இல்லாத தமிழகத்தை நோக்கி நமது சமூகத்தை வழிநடத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# தொடருந்து மேம்பாலம் இடிந்து விழுந்ததில் 17 பேர் பலி

இந்தியாவில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் தொடருந்து மேம்பாலம் இடிந்து விழுந்ததில் 17 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த அனர்த்தம் நேற்று இடம் பெற்றுள்ளது என அந்த நாட்டு ஊட கங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் தகவல் அறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்குச் சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது 17 தொழிலாளர்கள் உயிரிழந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். மேலும் பலரைக் காணவில்லை என்றும் இதனால் உயிரிழப்பின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் கூறியுள்ளனர்.

தொடர்ந்து மீட்பு பணி நடைபெற்று வருகிறது. இந்த விபத்துக்கான காரணம் எதுவும் தெரியவில்லை. முறையான பாதுகாப்பு அம்சங்களுடன் மேம்பாலம் கட்டும் பணி நடந்ததா? என்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவிக்கப்படுகின்றது.

தொடருந்து மேம்பாலம் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்குப் பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இறந்தவர்களின் குடும்பத்திற்குப் பிரதமர் நிவாரண நிதியில் இருந்து 2 இலட்சம் இந்திய ரூபா வழங்கப்படும் என்றும் காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் இந்திய ரூபாவும் வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

# சிங்கப்பூர் ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கும் மூன்று வேட்பாளர்கள்!



சிங்கப்பூர் ஜனாதிபதி தேர்தலில் தமிழர் ஒருவர் உள்ளடங்களாக மூன்று வேட்பாளர்கள் போட்டியிட நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த தேர்தலில் இங் கொக் சாங், முன்னாள் மூத்த அமைச்சர் தர்மன் சண்முகரட்ணம் மற்றும் டான் கின் லியான் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

சிங்கப்பூர் ஜனாதிபதி தேர்தல் அடுத்த மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளதுடன் அன்றைய தினம் அந்த நாட்டு பொது விடுமுறையாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் பங்குபற்றும் தமிழர் ஒருவர் உட்பட மூவரும் தமது வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

இதன்போது வேட்ப்பாளர்களுக்கு மக்களிடம் உரையாட இரண்டு நிமிடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அங்கு கருத்து தெரிவித்த தர்மன் சண்முகரட்ணம், கண்ணியமான போட்டி, நியாயமான பிரச்சாரம் என்பவற்றுடன் முழு மனதுடன் சிங்கப்பூர் மக்களுக்கு சேவையாற்ற விரும்புகிறேன் என தெரிவித்துள்ளார்.

நமது எதிர்காலம் மேலும் கடினமானதாகவும் சவாலானதாகவும் இருக்கப்போகிறது. அதனால் பல ஆண்டுகளாக நான் பெற்ற அனுபவங்களையும் திறன்களையும் பயன்படுத்தி மக்களுக்கு சேவையாற்ற இந்த போட்டியில் களமிறங்கியுள்ளேன் எனவும் தெரிவித்துள்ளார்.

## கர்ப்பப்பை மாற்று அறுவை சிகிச்சை வெற்றி!



பிரித்தானியாவில், முதன்முறையாக பெண் ஒருவருக்கு கர்ப்பப்பை மாற்று அறுவை சிகிச்சை நடந்து முடிந்துள்ளது.

இங்கிலாந்தில் வாழும் பெண் ஒருவர் அபூர்வ நோய் ஒன்றால் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவரால் தாயாக முடியாத நிலைமை இருந்தது. அதாவது, அவரது கருப்பை குழந்தையை சுமக்கும் அளவில் இல்லை.

இந்த நிலையில், அவரது அக்கா, தனது கர்ப்பபையை தன் சகோதரிக்கு தானமாக வழங்க முன்வந்துள்ளார்.

அதனை தொடர்ந்து, மருத்துவர்கள் உட்பட 20 பேர் கொண்ட குழு ஒன்று, 17 மணி நேரம் நிகழ்ந்த அறுவை சிகிச்சை ஒன்றில், அக்கா வின் கருப்பையை தங்கைக்கு பொருத்தியுள்ளனர்.

கர்ப்பப்பை பொருத்தப்பட்டு இரண்டு வாரங்களில் தங்கைக்கு மாதவிடாயும் வந்துவிட்டது. அதாவது, அவரது இனப்பெருக்க உறுப்புகள், தானமாக பெறப்பட்ட கர்ப்பப்பை வரை, சரியாக இயங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

## பிரித்தானிய உணவு பொருட்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் கடும் கட்டுப்பாடு!




பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து, பிரித்தானிய பொருட்கள் ஐரோப்பிய ஒன்றியத்துக்குள் செல்வதற்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

வடக்கு அயர்லாந்தில், சில உணவுகளின் பாக்கெட்களில் 'ஐரோப்பிய ஒன்றியத்துக்காக அல்ல' என்ற லேபில் ஒட்டப்பட்டுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

2024 ஒக்டோபர் முதல், இப்படி ஒரு மாற்றம் பிரித்தானியா முழுவதுமே நடைமுறைக்கு வர உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2025 ஆம் ஆண்டிலிருந்து, வட அயர்லாந்துக்கு அனுப்பப்படும் மற்ற பொருட்களின் மீதும் இந்த லேபில் ஒட்டப்பட உள்ளது.

இந்த மாற்றம் வட அயர்லாந்துக்கான பிரெக்சிட் 2019 ஒப்பந்தங்களில் செய்யபடும் பெரும் மாற்றங்களின் ஒரு பகுதியாகும்.


பிரித்தானியாவின் மற்ற பகுதிகளுக்கும் வட அயர்லாந்துக்கும் இடையில் அமைந்துள்ள அயர்லாந்துக் குடியரசு, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு பகுதியாகும்.

எனவே அயர்லாந்து வழியாக வட அயர்லாந்துக்குள் செல்வதும், ஐரோப்பிய ஒன்றியம் வழியாக வட அயர்லாந்து செல்வது போன்றது தான் என கூறப்படுகின்றது.

ஆகவே, வட அயர்லாந்துக்குள் இறைச்சி, பால் போன்ற பொருட்களைக் கொண்டு செல்வதில் அன்றாட பிரச்சினைகள் உருவாகின.

இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக வட அயர்லாந்துக்கு அனுப்பப்படும் இறைச்சி, பால் போன்ற பொருட்களில், 'ஐரோப்பிய ஒன்றியத்துக்காக அல்ல' என்ற லேபில் ஒட்டப்பட உள்ளது.

இதனால், ஆவண சரிபார்ப்பு முதலான விடயங்களுக்காக, தேவை யற்ற கால தாமதம் தவிர்க்கப்படும் என்பதால், இந்த நடைமுறை நடைமுறைப் படுத்தப் படவுள்ளது.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949